# மலேசிய இந்தியர்களின் வாழ்க்கையில் சீனர்களின் நம்பிக்கைகளின் தாக்கம்

# The Influence of Chinese Believes on Malaysian Indians

முனைவர் சில்லாழி / Dr Silllalee[1]
தமிழரசி முனியாண்டி / Tamil Arasi Muniandy[2]
கிருஷ்ணவேணி சுப்பிரமணியம் / Krishnaveni Subramaniam[3]

***Abstract***

Forefathers of the Indian community originated from India. They were brought into *Tanah Melayu* by the British at the end of the 19th and beginning of the 20th century, to invest their labor in *Tanah Melayu.* However, the cultural relationship between India and *Tanah Melayu* goes back a long way in history to the beginning of the century. The similar background is noticeable in the history of the arrival of the Chinese Community who was brought in by the British to *Tanah Melayu* during the same period to work in the tin mines. After *Tanah Melayu* obtained independence from the British colonizers the Indian and Chinese communities got citizenship and remained permanently in *Tanah Melayu* as citizens .Malaysia is a multi-ethnic and multi-racial country. Now, the Malays, Indians and Chinese are the three major races in Malaysia. The Indian community whose long stay in Malaysia has a unique life with Chinese practices. This is observed in many practices such as praying to idols of Chinese beliefs, visiting Chinese Shamans, belief in Feng shui, wearing gems or gold jewelry with Chinese symbolic beliefs, learning the lion dance and others. Many of these practices are being followed by the Indians in Malaysia to bring wealth and success in their lives and also to get protectionfrom spirits and negative forces. These practices flourished from living together with the Chinese since the British rule. During that period also it has been observed as cultural sharing which has strengthened the relationship between the two races in Malaysia.

**Keywords:** Malaysian Indians, Malaysian Chinese, Believes, Culture, Rituals.

[1] The author is a Assistant Professor in the Department of Modern Languages, University Tunku Abdul Rahman, Kajang, Malaysia. silllalee@utar.edu.my / silllalee@yahoo.com

[2] The author is a lecturer in the Department of General Studies, University Tunku Abdul Rahman, Kajang, Malaysia. tamilarasi@utar.edu.my

[3] The author is a lecturer in the Department of Modern Languages, University Tunku Abdul Rahman, Kajang, Malaysia. krishnaveni@utar.edu.my

## முன்னுரை

மலேசியா பல்வேறு இனங்களை உள்ளடக்கிய நாடு. இங்கு வாழும் பல்வேறு இனங்களுள் மலாய்க்காரர், சீனர், இந்தியர் ஆகிய மூன்று இனங்களே பெரும்பான்மை மக்களாக அறியப்படுகின்றனர். இவர்களோடு சபா, சரவாக் ஆகிய மாநிலங்களில் வாழும் மக்கள், தீபகற்ப மலேசியாவில் வாழும் பூர்வகுடியினர் ஆகியோரையும் சேர்த்து மலேசியா பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கிய நாடாக விளங்குகின்றது. இப்பண்பாட்டுக் கூறுகள் யாவுமே மலேசியாவைத் தனித்துவம் மிக்க நாடாக மிளிரச் செய்துள்ளது (Timothy Daniels, 2005).

மலேசியாவில் வாழும் இம்மூன்று முதன்மை இனங்களின் பண்பாட்டுக் கூறுகள் யாவும் அந்த அந்த இனத்தாரால் காலம் காலமாகப் பாதுகாக்கப்பட்டும் வளர்க்கப்பட்டும் வந்துள்ளன. அதே வேளையில் ஒவ்வொரு இனத்தின் ஒரு சில பண்பாட்டுக் கூறுகள் மற்ற இனத்தின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதுவும் அறியப்படுகின்றது (Silllalee, 2011p. 142). குறிப்பாக மலேசியாவில் இரண்டாவது மிகப் பெரிய இனமாகக் கருதப்படும் சீன மக்களின் பண்பாட்டுக் கூறுகள் மலேசிய இந்தியர்களின் வாழ்க்கையில் பல்வேறு நிலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. இதில் குறிப்பாக மலேசியச் சீனர்களின் பல்வேறுவிதமான நம்பிக்கைகள் மலேசிய இந்தியர்களின் வாழ்க்கையில் கலந்து இருப்பது மறுக்க முடியாது (கிக்ஷீவீக்ஷீ ஞ்மீக்ஷீமீனீணீஸீ, 2005, ஜீ.33). இவ்வாறு மலேசிய இந்தியர்களின் வாழ்க்கையில் ஒன்றிவிட்ட சீனர்களின் நம்பிக்கைகள் இவர்களின் வாழ்க்கையில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

## ஆய்வு முன்னோடிகள்

தற்போதைய ஆய்வில் ஆய்வு முன்னோடிகளாக இரண்டு முனைவர் பட்ட ஆய்வேடுகள் கண்டறியப்பட்டுள்ளன. Lan Clarke என்பாரின் "Malaysian Chinese Religion and Society: Ritual Action and the Creation of Social Identity in Modern Urban Malaysia" (1969), எனும் ஆய்வும், Law Kian Aun எனும் ஆய்வாளரின் "The Influence of Chinese Traditional Philosophy on Malaysia Chinese Corporate Leaders" (2013) எனும் ஆய்வும் மலேசிய சீன மக்களின் தனித்துவப் பண்பாட்டு அடையாளங்களைக் குறிப்பாக அவர்களின் சமயம், தத்துவம், நம்பிக்கைகள் ஆகியவற்றைப் பற்றி ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது. இவ்வாய்வுகள் தற்போதைய ஆய்வில் மலேசிய சீன மக்களின் அடிப்படை நம்பிக்கைகள் அவற்றின் தத்துவங்கள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.

இதைத் தவிர்த்து Lim Chooi Kwa மற்றும் Chia Oai Peng ஆகியோரின் "Adat Resam Masyarakat Cina" எனும் நூலும் மலேசிய சீன மக்களின் பண்பாட்டுவியலைப் பேசுவதாகவே அமைந்துள்ளது. Tan Chee Beng என்பாரின் "Chinese Religion In Malaysia"; a general view" எனும் ஆய்வுக் கட்டுரையும் (Vol.421983), Sharon Carstens எனும் ஆய்வாளரின் "Cultures, Identities; Studies In Malaysian Chinese Worlds" (2002), எனும் கட்டுரையும் தற்போதைய ஆய்வுக்கு மிக நெறுக்கமாகவே இருப்பது அறியப்படுகின்றது. இவ்விரு ஆய்வுக் கட்டுரைகளும் மலேசிய சீன மக்களின் நம்பிக்கைகள் குறித்து வெகுவாகப் பேசுகின்றன. இவை மலேசியச் சீன மக்களின் நம்பிக்கை குறித்த புரிதைப் பெறுவதற்குத் துணைசெய்கின்றன.

மேலும், "Chinese Overseas: Comparative Cultural Issues" எனும் Tan Chee Beng-இன் புத்தகம் மலேசிய சீனர்களைப் பற்றியும், மற்ற இனத்தாருடன் இவர்களுக்கு உள்ள பண்பாட்டுபொருளாதாரத் தொடர்பு குறித்தும் பேசுகிறது. இந்நூலைப் போலவே, Lee Kam Hing எனும் ஆய்வாளரின் "The Chinese in Malaysia" (2000) எனும் நூலும் மலேசிய சீனர்களின் வரலாறு, பொருளாதார நடவடிக்கை, அரசியல், சமூகவியல், பண்பாடு, சமயம், நம்பிக்கைகள் போன்றவற்றை விவரித்துரைக்கின்றது. இவ்விரு நூல்களும் கூட தற்போதைய ஆய்வில் மலேசிய இந்தியர்களிடையே சீன மக்களின் நம்பிக்கைகள் எவ்வாறு நிலைபெற்றுள்ளன

என்பதனை விளக்குவதாகவே உள்ளன.

ஆய்வு முன்னோடிகளை முன்னிருத்திப் பார்க்கும் போது மலேசிய இந்தியர்களிடையே சீன மக்களின் நம்பிக்கைத் தாக்கம் என்பது ஆழ்ந்த பொருளுடைய, முக்கியத்துவம் நிறைந்த ஓர் ஆய்வாக இருப்பது அறியப்படுகிறது. அதே வேளையில் இந்த ஆய்வு முன்னோடிகள் யாவும் தற்போதைய ஆய்வில் ஆய்ந்தறியப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளை விவரித்துரைப்பதற்குப் பெரும் பலமாக அமைகின்றன.

## ஆய்வு நெறி

தற்போதைய ஆய்வானது அளவுசார் (Quantitative) நெறியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது (Creswell, 2007). இந்த ஆய்வு நெறியின் அடிப்படையில் 60 மலேசியத் இந்தியக் குடும்பங்களில் கள ஆய்வு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காகப் பிரித்தியேகமாகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆய்வுப் பாரத்தில் உள்ள கேள்விகளுக்கு ஆய்வுப் பங்கேற்பாளர்கள் பதில் அளிக்கப் பணிக்கப்பட்டனர். இந்த பதில்கள் யாவும் எஸ்பிஎஸ்எஸ் (ஷிறிஷிஷி) எனும் மென்பொருளில் பதிவு செய்யப்பட்டு அதன் மூலம் கிடைக்கப்பட்டுள்ள தரவுகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

மேலும், ஆய்வாளர் இந்தியக் குடும்பங்களை நேரடியாகச் சந்தித்து கள ஆய்வில் ஒரு சில தரவுகளைப் பெற்றுள்ளார். அதோடு இந்தியக் குடும்பங்களில் காணப்பட்ட சீனர்களின் நம்பிக்கை சார்ந்த குறியீடுகள், பொருள்கள் ஆகியனவும் நிழற்படம் வாயிலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை ஆய்வுக்கான ஆதாரங்களாக மட்டுமே பயன்படுத்தப்படவுள்ளன. அதோடு நேர்முகக் காணலில் ஆய்வின் பங்கேற்பாளர்களிடம் இருந்து பெறப்பட்ட வாய்மொழித் தகவல்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை யாவும் அளவுசார் நெறியுடன் இணைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

## ஆய்வு வரையறை

தற்போதைய ஆய்வானது உலுசிலாங்கூர் மற்றும் இரவாங் வட்டாரத்தில் உள்ள இந்திய மக்களிடம் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் சுறுக்கம் கருதி மொத்தம் 60 இந்தியக் குடும்பங்கள் மட்டுமே பங்கேற்பாளர்களாகக் கள ஆய்வில் உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களிடம் கேட்கப்பட்ட கேள்வி எஸ்பிஎஸ்எஸ் மென்பொருள் வாயிலாகக் கணிப்புக்கு உட்படுத்தப் பட்டதால் கேள்விப் பாரத்தில் உள்ள கேள்விகள் அனைத்தும் எண்ணிக்கை சார் அளவிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன.

புத்த மதம் என்பது இந்திய நாகரீகத்தில் ஒரு பகுதியாக விளங்கிய போதும் இம்மதம் சீன மக்களிடம் மிகுதியாகக் கடைபிடிக்கப்படுகிறது. மலேசியாவைப் பொருத்த மட்டில் புத்த மதத்தைச் சீன மக்களே அதிகப் பெரும்பான்மையில் கடைபிடிக்கின்றனர். மேலும், இங்குள்ள புத்த மத வழிபாட்டு முறைகள் அனைத்துமே முழுமையாகச் சீன மக்களின் பண்பாட்டுத் தழுவலில் கடைபிடிக்கப்படுகின்றது. அதனால் தற்போதைய ஆய்வில் மலேசிய இந்தியர்களிடையே புத்த மத வழிபாடு கடைபிடிக்கப்படுவது சீனர்களின் நம்பிக்கையின் அடிப்படையிலேயே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## மலேசிய இந்தியர்களிடையே சீனர்களின் தெய்வ வழிபாடு

அளவியல் நெறியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் வழி மலேசிய இந்தியர்களிடையே சீன மக்களின் தெய்வ வழிபாடு அவர்களின் நடைமுறை வாழ்க்கையில் அனுசரிக்கப்பட்டுள்ளது அறியப்பட்டுள்ளது. மலேசிய இந்தியர்களின் இல்லங்களில் இந்துக்களின் தெய்வ வழிபாட்டுச் சித்திரங்கள், விக்கிரகங்களோடு சீனர்களின் ஒரு சில வழிபடு தெய்வச் சிலைகளும் குறியீடுகளும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் இது மிகக் குறைந்த விழுக்காட்டிலேயே இருக்கிறது. பட்டியலைக் காண்க:

***பட்டியல் 1: வீட்டில் சீனர்களின் தெய்வங்களை வழிபடுவோரின் எண்ணிக்கை***

| கருத்து | எண்ணிக்கை | விழுக்காடு (%) |
|---|---|---|
| முற்றாக மறுத்தல் | 19 | 31.7 |
| மறுத்தல் | 9 | 15.0 |
| நடுநிலை | 7 | 11.6 |
| ஏற்றல் | 19 | 31.7 |
| முழுமையாக ஏற்றல் | 6 | 10.0 |
| மொத்தம் | 60 | 100 |

மேற்கண்ட பட்டியல் 10% மலேசிய இந்தியர்கள் மட்டுமே சீன மக்களின் வழிபடு தெய்வங்களைத் தங்கள் இல்லத்தில் வழிபடுவதை முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதைக் காட்டுகின்றது. 46.7% மறுத்தல் அல்லது முற்றாக மறுத்த என பதிலளித்துள்ளனர். சீன தெய்வங்களை வீட்டில் வைத்து வழிபடுதல் எனும் கருத்தை மறுத்தல், முற்றாக மறுத்தல், நடுநிலை என பதில் அளித்த பங்கேற்பாளர்களின் இல்ல வழிபாட்டு அறை அல்லது பகுதியில் சீனர்களின் வழிபடு தெய்வங்களின் படங்கள் அல்லது குறியீடுகள் ஏதும் காணப்படவில்லை கள ஆய்வின் போது கண்டறியப்பட்டது.

சீன வழிபடு தெய்வங்களை வீட்டில் வைத்து வழிபடுதல் எனும் கருத்தை ஏற்றுக் கொண்டோரின் இல்லங்களிலும் கூட ஒரு சிலர் மட்டுமே சீன வழிபாட்டு தெய்வங்களை வைத்திருந்ததை கள ஆய்வின் வழி கண்டறியப்பட்டது. மேலும் சிலர் இக்கருத்தினை ஏற்றுக் கொண்ட போதிலும் கூட சீனர்களின் தெய்வ வழிபாட்டை கடைபிடிப்பதாகத் தெரியவில்லை. சீன தெய்வ வழிபாட்டைக் கடைபிடிப்போரின் வழிபாட்டு அறையில் சிரிக்கும் புத்தர் சிலை (Laughing Buddha), குவான் யின் சிலை (Guan Yin), சீன எழுத்து பொரித்த சித்திரம் போன்றவையும்; சீனர்களின் தீபம், ஊதுபத்தி, சீன அடையாளக் குறியீடுகள் போன்றவையும் காணப்பட்டன. இவை அனைத்தும் மலேசிய இந்தியர்களின் வழிபடு இடத்தில் வைக்கப்பட்டிருந்தன. சிலர் சீனத் தெய்வங்களுக்கான தனித்த வழிபாட்டைச் செய்வதாகவும், மேலும் சிலர் இந்துத் தெய்வங்களுடன் சேர்த்தே வழுபாடு செய்வதாகவும் தெரிவித்தனர்.

சீன வழிபடு தெய்வங்களின் சித்திரங்கள், சிலைகள் போன்றவை உப தெய்வங்களாக வைக்கப்பட்டுள்ளனவே தவிற இவையே இவர்களின் இல்லங்களில் முதன்மைத் தெய்வமாக வழிபடப்படவில்லை என்பதுவும் ஆய்வின் வழி அறியப்பட்டுள்ளது. இன்னும் சிலரது வீடுகளில் வளாகத்தில் முனீஸ்வரர், மதுரை வீரன், சங்கிலிக்கருப்பன் போன்ற தெய்வங்களுக்காகச் சிறிய கோவில்கள் எழுப்பப்பட்டிருந்தன. அவற்றின் ஒரு பகுதியில் சீனர்களின் டத்தோ வழிபாட்டுச் சிலைகளும் சிரிய அளவில் அமைவுறப்பட்டிருந்தமையும் கள ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் சிலர் சீன வழிபாட்டு விகாரங்களில் (சிறிய ஆலயம்) இந்துக் கடவுளர்களின் சிலைகள், படங்களை வைத்து வழிபடும் போக்கைக் கடைபிடிப்பதுவும் கள ஆய்வில் கண்டறியப்பட்ட செய்தியாகும்.

இது தவிற மலேசிய இந்தியர்கள் சீனர்களின் தெய்வ வழிபாட்டுத் தளங்கள், புத்த விகாரங்கள் போன்றவற்றிற்குச் சென்று வழிபடும் போக்கையும் கொண்டுள்ளனர் என்பது இந்த ஆய்வின் வழி கண்டறியப்பட்ட மற்ருமொரு செய்தியாகும். எஸ்பிஎஸ்எஸ் மென்பொருளின் பதிவின் மூலம் மலேசிய இந்தியர்களிடையே சீன தெய்வங்களின் வழிபாட்டுத் தளங்களுக்குச் செலுதல் குறித்து ஆய்வு செய்யப்பட்டதன் வாயிலாக கீழ்க்கண்ட அடைவு கண்டறியப்பட்டது. தொடரும் பட்டியலைக் காண்க:

***பட்டியல் 2: சீனர்களின் தெய்வ வழிபாட்டுத் தளங்களுக்குச் சென்று வழிபடுதல்.***

| கருத்து | எண்ணிக்கை | விழுக்காடு (%) |
|---|---|---|
| முற்றாக மறுத்தல் | 14 | 23.3 |

| | | |
|---|---|---|
| மறுத்தல் | 9 | 15.0 |
| நடுநிலை | 7 | 11.7 |
| ஏற்றல் | 23 | 38.3 |
| முழுமையாக ஏற்றல் | 7 | 11.7 |
| மொத்தம் | 60 | 100 |

பட்டியல் 2 மொத்தம் 50.0% பங்கேற்பாளர்கள் சீன வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்தல் எனும் கருத்தை முழுமையாக ஏற்றல் (11.7%) மற்றும் ஏற்றல் (38.3%) எனும் கருத்தில் இருப்பதைக் காட்டுகிறது. இதற்கு முன்னர் உள்ள கேள்வியான, வீட்டில் சீன தெய்வங்களை வழிபடுவது எனும் கருத்துத்தை முழுமையாக ஏற்றல் (10.0%) மற்றும் ஏற்றல் (31.7%) என்பதற்கு மொத்தம் 41.7% வாக்கு கிடைத்துள்ளது. இது போலவே சீன வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று வழிபடுவதை முற்றாக மறுத்தல் (23.3%) மற்றும் மறுத்தல் (15.0%) என்பதற்கு மொத்தம் 38.3% பங்கேற்பாளர்கள் எனும் பதிலைத் தேர்ந்தெடுத்துள்ளனர். மேற்கூறியதைப் போலவே வீட்டில் சீன தெய்வங்களை வழிபடுவது எனும் கருத்துத்தை முற்றாக மறுத்தல் (31.7%) மற்றும் மறுத்தல் (15.0%) என்பதற்கு மொத்தம் 46.7% பங்கேற்பாளர்களின் வாக்கு கிடைத்துள்ளது.

இதனை ஒப்பிட்டுப் பார்க்கும் போது சீன வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று வழிபடுதல் என்பதற்கு வீட்டில் வழிபடுவதைக் காட்டிலும் 8.3% பங்கேற்பாளர்கள் கூடுதல் வாக்களித்துள்ளனர். இதன் மூலம் மலேசிய இந்தியர்கள் இல்லங்களில் சீன தெய்வங்களை வைத்து வழிபடுவதைக் காட்டிலும் அவர்களின் ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதற்கு மிக அதிகமான ஆதரவு தருவதைக் காண முடிகின்றது. இது குறித்து பங்கேற்பாளர்களில் சிலர், சுற்றுலா செல்லும் காலங்களில் அங்குள்ள சீன ஆலயங்களுக்குச் சென்று வழிபடுதல் (இது பினாங்கு, கெந்திங் மலை போன்ற சுற்றுலாத் தலங்களில் மிக அதிகமாக உள்ளது) உண்டு என்று பதிலளித்துள்ளனர். மேலும் சிலர் புத்த பூர்ணிமா எனப்படும் விசாக தினத்தில் புத்த விகாரங்களுக்குச் சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் எனக் கூறியுள்ளனர்.

மேலும், வீட்டில் சீன வழிபடு தெய்வங்களை வழிபடும் போது சீனர்களின் வழிபாட்டும் முறைகளைப் பின்பற்றுவதில் போதிய தெளிவு இன்மையும் சரியான முறையைப் பின்பற்ற இயலாமையும் வீட்டில் சீன தெய்வங்களை வைத்து வழிபடுவதிலுள்ள சவால்களாகத் தெரித்துள்ளனர். இதற்குப் பதிலாக சீனர்களின் வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று வழிபடுவது மேலும் இலகுவாக இருப்பதால் வீட்டில் சீனத் தெய்வங்களை வைத்து வழிபடுவதைக் காட்டிலும் அவர்களின் ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது ஏற்புடையதாக பங்கேற்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மலேசிய இந்தியர்களிடையே சீனர்களின் சடங்குகளைக் முறைகள்

மலேசியச் சீன மக்கள் இந்துக்களைப் போலவே பல்வேறு சடங்குகளைத் தங்கள் வழிபாட்டில் கடைபிடிக்கும் போக்கைக் கொண்டுள்ளனர். இச்சடங்குகளில் சில அன்றாட வழிபாட்டுச் சடங்குகளாகவும் ஒரு சில சடங்குகள் சிறப்பு வழிபாட்டுச் சடங்குகளாகவும் திகழ்கின்றனர் (Chee Beng Tan, 1985, p.71). இத்தகைய சடங்குகள் மலேசிய இந்தியர்களிடமும் ஓரளவு நிலவுவது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. தொடரும் பட்டியலைக் காண்க:

***பட்டியல் 3: சீனர்களின் சடங்குகளைப் பின்பற்றுதல்.***

| கருத்து | எண்ணிக்கை | விழுக்காடு (%) |
|---|---|---|
| முற்றாக மறுத்தல் | 19 | 31.7 |
| மறுத்தல் | 10 | 16.7 |
| நடுநிலை | 13 | 21.7 |
| ஏற்றல் | 14 | 23.3 |
| முழுமையாக ஏற்றல் | 4 | 6.6 |
| மொத்தம் | 60 | 100 |

பட்டியல் 3இல் சீனர்களின் சடங்குகளைப் பின்பற்றுதல் (ஏற்றல் - முழுமையாக ஏற்றல்) எனும் கேள்விக்கு மொத்தம் 29.9% பங்கேற்பாளர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்தக் கேள்விக்குப் பெரும்பார்மையினர் முற்றாக மறுத்தல் (31.7%) மற்றும் மறுத்தல் (16.7%) என்பதாகப் பதில் அளித்துள்ளனர். 21.7% பங்கேற்பாளர்கள் இக்கேள்விக்கு எவ்வித பதிலையும் அளிக்கவில்லை. ஆயினும் கூட ஆய்வின் முடிவினைக் காணும் போது 29.9% பங்கேற்பாளர்கள் சீனர்களின் சடங்குகளைப் பின்பற்றுவதற்கு ஆதரவு தெரிவித்தமை மலேசிய இந்தியர்களிடையே சீனச் சடங்கு முறைகளைப் பின்பற்றும் போக்கு உள்ளது என்பதை உறுதிபடுத்துகிறது.

கள ஆய்வில் இக்கருத்துக் ஏற்புடைய பதிலை அளித்த பங்கேற்பாளர்களிடம் இது குறித்துக் கலந்துரையாடப்பட்ட போது இவர்கள் சீனர்களின் விளக்கு, ஊதுபத்தி ஆகியவற்றை ஏற்றுதல், அவர்களின் பாரம்பரியப் பலகாரங்கள், பழங்கள் போன்றவற்றைப் படையலிடுதல் போன்ற எளிமையான சடங்குகளையே கடைபிடிப்பதாகக் கருத்து தெரிவித்தனர். மேலும் சிலர் தங்களின் இல்லங்களில் உள்ள எதிர்மறையான ஆற்றல்கள், தீய சக்திகள் போன்றவற்றில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு சீன மந்திரவாதிகள் கொடுக்கும் புனித நீரை வீட்டில் தெளித்தல், பாதுகாப்புப் பொருள்களை வீட்டு வாசலில் அல்லது கதவுப் பகுதிக்கு மேல் கட்டி வைத்தல் போன்ற சடங்குகளைப் பின்பற்றுவதாகத் தெரிவித்தனர்.

மேலும் சிலர் தாங்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகள், நிறுவனங்கள், தோட்டம் போன்றவற்றில் தங்களின் சீன முதலாளிமார்களால் அமைக்கப்பட்ட சிறிய சீன ஆலயங்களில் அவ்வப்போது வழிபாடு செய்வதாகவும், அங்குள்ள சீனத் தெய்வங்களுக்கு சிறப்பு வழிபாடு (ஆண்டு விழா) மேற்கொள்ளும் போது அந்த வழிபாட்டிலும் அது சார்ந்த சடங்குகளிலும் கலந்து கொள்வதாகவும் தெரிவித்தனர். இதன் மூலமும் இவர்களுக்குச் சீனர்களின் வழிபாட்டு முறை அல்லது சடங்கு குறித்து அறியப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

சீனர்களின் சடங்குகள் எனும் போது இதில் மிகப் பெரும்பான்மையாக பெருநாள் காலங்களில் சீனர்களின் முறைப்படி அன்பளிப்புத் தொகை (அங் பாவ்-Ang Pow) கொடுப்பது மலேசிய இந்தியர்களிடையே கடைபிடிக்கப்படுவது ஆய்வில் அறியப்பட்டுள்ளது. ஆய்வின் பங்கேற்பாளர்களுள் 73.3% பெருநாள் காலங்களில் அங் பாவ் கொடுக்கும் வழக்கத்தைக் கடைபிடிக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளனர். இம்முடிவானது இப்பண்பாட்டு வழக்கம் மலேசிய இந்தியர்களிடையே மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை உறுதிபடுத்துகின்றது. மலேசிய இந்தியர்களிடயே இன்றளவும் தீபாவளிப் பண்டிகையின் போது பிள்ளைகளுக்கு அன்பளிப்புப் பணம் கொடுக்கும் வழக்கம் நிலவுகிறது. இவ்வழக்கமானது சீனர்களின் வழக்கத்திலிருந்து என்பதை மறுப்பதற்கில்லை (Rajantheran, 1994, p.12).

மலேசிய இந்தியர்களிடையே அதிஷ்டத்தைக் கொடுக்கக் கூடிய சீனர்களின் குறியீடுகள்

மலேசிய இந்தியர்களிடையே அதிர்ஷ்டம் கொடுக்கக் கூடிய பொருள்கள், சிலைகள், குறியீடுகள் போன்றவற்றை தங்கள் வசம் வைத்துக் கொள்ளும் போக்கு உள்ளது. இந்துக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் குபேரனின் சிலை, வலம்புரி சங்கு, போன்றவற்றை வீட்டில் வைத்திருந்தால் மகாலெட்சுமியின் கடாட்ஷம் வீட்டில் நிலைக்கும் எனும் நம்பிக்கை உள்ளது. இதோடு வீட்டில் சீனர்களின் நம்பிக்கையின் அடிப்படையில் அதிர்ஷடத்தைக் கொடுக்கக் கூடிய சில சிலைகள், குறியீடுகள் போன்றவையும் மலேசிய இந்தியர்களின் வாழ்க்கையில் நிலவுவது இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. அந்த வகையில் ஆய்வில் கண்டறியப்பட்ட சில குறிப்புகளைக் தொடர்ந்து வரும் பட்டியல்களில் காண்க:

*பட்டியல் 4: சீனர்களின் வாஸ்து சாஸ்திரக் கண்ணாடிப் பயன்பாடு*

| கருத்து | எண்ணிக்கை | விழுக்காடு (%) |
|---|---|---|
| முற்றாக மறுத்தல் | 15 | 25.0 |
| மறுத்தல் | 6 | 10.0 |
| நடுநிலை | 14 | 23.4 |
| ஏற்றல் | 17 | 28.3 |
| முழுமையாக ஏற்றல் | 8 | 13.3 |
| மொத்தம் | 60 | 100 |

*பட்டியல் 5: சீனர்களின் கடல் நாக (டிராகன்) வரைபடம் / சிலையை வீட்டில் வைத்தல்.*

| கருத்து | எண்ணிக்கை | விழுக்காடு (%) |
|---|---|---|
| முற்றாக மறுத்தல் | 13 | 21.6 |
| மறுத்தல் | 6 | 10.0 |
| நடுநிலை | 10 | 16.7 |
| ஏற்றல் | 21 | 35.0 |
| முழுமையாக ஏற்றல் | 10 | 16.7 |
| மொத்தம் | 60 | 100 |

*பட்டியல் 6: சீனர்களின் மூன்று கால் தவளைச் சிலையை வீட்டில் வைத்தல்.*

| கருத்து | எண்ணிக்கை | விழுக்காடு (%) |
|---|---|---|
| முற்றாக மறுத்தல் | 12 | 20.0 |
| மறுத்தல் | 12 | 20.0 |
| நடுநிலை | 7 | 11.7 |
| ஏற்றல் | 18 | 30.0 |
| முழுமையாக ஏற்றல் | 11 | 18.3 |
| மொத்தம் | 60 | 100 |

*பட்டியல் 7: சீனர்களின் சிரிக்கும் புத்தர் சிலையை வீட்டில் வைத்தல்.*

| கருத்து | எண்ணிக்கை | விழுக்காடு (%) |
|---|---|---|
| முற்றாக மறுத்தல் | 16 | 26.7 |
| மறுத்தல் | 6 | 10.0 |
| நடுநிலை | 4 | 6.7 |
| ஏற்றல் | 23 | 38.3 |
| முழுமையாக ஏற்றல் | 11 | 18.3 |
| மொத்தம் | 60 | 100 |

*பட்டியல் 8: சீனர்களின் அதிர்ஷ்டப் பூனைச் சிலையை வீட்டில் வைத்தல்.*

| கருத்து | எண்ணிக்கை | விழுக்காடு (%) |
|---|---|---|
| முற்றாக மறுத்தல் | 13 | 21.7 |
| மறுத்தல் | 6 | 10.0 |
| நடுநிலை | 7 | 11.6 |
| ஏற்றல் | 21 | 35.0 |
| முழுமையாக ஏற்றல் | 13 | 21.7 |
| மொத்தம் | 60 | 100 |

*பட்டியல் 9: குவான் யின் சிலையை வீட்டில் வைத்தல்.*

| கருத்து | எண்ணிக்கை | விழுக்காடு (%) |
|---|---|---|
| முற்றாக மறுத்தல் | 16 | 26.7 |
| மறுத்தல் | 9 | 15.0 |
| நடுநிலை | 8 | 13.3 |
| ஏற்றல் | 19 | 31.7 |
| முழுமையாக ஏற்றல் | 8 | 13.3 |
| மொத்தம் | 60 | 100 |

***பட்டியல் 10:* குதிரை சிலை அல்லது சித்திரத்தை வீட்டில் வைத்தல்.**

| கருத்து | எண்ணிக்கை | விழுக்காடு (%) |
|---|---|---|
| முற்றாக மறுத்தல் | 14 | 23.3 |
| மறுத்தல் | 4 | 6.7 |
| நடுநிலை | 8 | 13.3 |
| ஏற்றல் | 24 | 40.0 |
| முழுமையாக ஏற்றல் | 10 | 16.7 |
| மொத்தம் | 60 | 100 |

மேற்கண்ட பட்டியல்களின் அடிப்படையில் சீனர்களின் வாஸ்து கண்ணாடி, சீனக் கடல் நாகச் சிலை அல்லது வரைபடம், மூன்று கால் தவலைச் சிலை, சிரிக்கும் புத்தர் சிலை, அதிர்ஷ்ட பூனைச் சிலை, குவான் யின் சிலை, குதிரைச் சிலை அல்லது சித்திரம் ஆகியவற்றை அதிர்ஷ்டம் கருதி மலேசிய இந்தியர்கள் தங்கள் வீட்டில் வைத்திருப்பது அறியப்படுகின்றது. இதில் சீனர்களின் வாஸ்து கண்ணாடி (41.6%), சீனக் கடல் நாகச் சிலை அல்லது வரைபடம் (51.7%), மூன்று கால் தவலைச் சிலை (48.3%), சிரிக்கும் புத்தர் சிலை (56.6%), அதிர்ஷ்ட பூனைச் சிலை (56.7%), குவான் யின் சிலை (45%), குதிரைச் சிலை அல்லது சித்திரம் (56.7%) ஆகிய அதிர்ஷ்டச் சிலை, குறியீடு ஆகியவற்றிற்கு இதனை முழுமையாக ஏற்றல் மற்றும் ஏற்றல் எனும் அடிப்படையில் பதில் அளித்தவர்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

இதில் சிரிக்கும் புத்தர் சிலையானது இந்துக்களின் குபேர தெய்வத்துடன் தொடர்புடையதாகவே காணப்படுகின்றது. கடல் நாகம் இந்துக்களின் வருணதேவனுடன் இணைத்துப் பார்க்கப்படுகின்றது. குதிரை இந்துக்களிடையேயும் அதிர்ஷ்டக் குறியீடாகவே காணப்பெறுகின்றது. இதில் சீனர்களின் குவான் யின் சிலை, மூன்று கால் தவலைச் சிலை, அதிர்ஷ்ட பூனைச் சிலை, வாஸ்து கண்ணாடி ஆகியன மட்டுமே சீனர்களின் தனித்துவம் மிக்க அதிர்ஷ்டக் குறியீடுகளாகக் காணப்படுகின்றன.

ஆயினும் ஒட்டு மொத்தத்தில் அதிஷ்டம் தொடர்பான சீனர்களின் நம்பிக்கை சார்ந்த விசயங்களில் மலேசிய இந்தியர்களிடம் அதிக ஈர்ப்பு இருப்பது அறியப்படுகின்றது. இது தவிர்த்து சில ஆபரணங்களிலும் சீனர்களின் குறியீடுகளான சீன தேவராஜர் வடிவர், குதிரை, சீட்டுக் கட்டு, கணித மணிச்சட்டம், மூன்று கால் தவளை, சீன நாகம், தங்க மீன், சிரிக்கும் புத்தர், 8 எண் போன்றவற்றை மோதிரமாகவும், சங்கிலியாகவும் இவர்கள் அணிந்திருந்தமை கள ஆய்வில் அறியப் பட்ட கூடுதல் செய்தியாகும். இவை பெரும்பாலும் வியாபாரத்தில் வெற்றி பெறவும், தொழிலில் மேன்மையடையவும் மலேசிய இந்தியர்களால் அணியப்பட்டது என்பது காரணமாக முன்வைக்கப்பட்டது.

மலேசிய இந்தியர்களிடையே சீனர்களின் நம்பிக்கைகள் நிலவுவதற்கான காரணங்கள்

மலேசிய இந்தியர்களிடையே சீனர்களின் நம்பிக்கை சார்ந்த விசயங்கள் நிலவுவதற்குச் சீனர்களிடையே இவர்களுக்கு உள்ள நட்புறவே முதன்மைக் காரணமாக அறியப்படுகின்றது. இவர்களின் வாழ்க்கையில் சீனர்கள் சிறு வயது நண்பர்களாகவும், தொழில் இட நண்பர்களாகவும் அல்லது முதலாளி / நிர்வாகியாகவும், அண்டை அயலாராகவும் இன்னும் பல்வேறு நிலைகளிலும் நட்புறவு பூண்டுள்ளனர். இந்த நட்பானது இவர்களுக்குச் சீன சமூகத்தில் கடைபிடிக்கப்படும் நம்பிக்கைகள் குறித்த செய்திகளை எளிதாகக் கொண்டு சேர்த்துள்ளது. அதோடு சீன சமூகம் பொருளாதாரத்தில் வெற்றி பெற்ற சமூகமாக மலேசியாவில் விளங்குவதும் மறுக்க முடியாத உண்மை (Edmund Terence Gomez, 1999). இக்கூற்றும் இவர்களின் நம்பிக்கை குறித்து மலேசிய இந்தியர்களிடையே ஆழ்ந்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது எனலாம். பொதுவில் மலேசிய இந்தியர்கள் பல்வேறு காரணங்களுக்காகச் சீன சமூகத்தின் நம்பிக்கைகளைத் தங்கள் வாழ்க்கையில் கடைபிடித்த போதும் ஒரு சில காரணங்கள் முதன்மையாக விளங்குகின்றன: அவை:

1. அதிர்ஷ்டம்பணவரவு: மலேசிய நாட்டில் சீன மக்கள் பொருளாதாரத்தில் வெற்றியடைந்த சமுதாயமாக விளங்குகின்றனர். இவர்கள் கடின உழைப்பால் முன்னேறியவர்களாக இருந்த போது இவர்களிடையே அதிஷ்டம் குறித்த நம்பிக்கைகள் மிகுதி (Hock Tong Cheu, 1993). இத்தாக்கம் அவர்களுடன் இணைந்து பழகும் மலேசிய இந்தியர்களிடமும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

2. தீய சக்திகளிடம் இருந்து பாதுகாப்பு: மலேசிய இந்தியர்களிடத்தே தீய சக்திகளிடம் இருந்து பாதுகாப்பு பெறும் நம்பிக்கை உள்ளது. சில வேளைகளில் இதற்காக இவர்கள் சீன மந்திரவாதிகளை அணுகும் போக்கும் உள்ளது (Silllalee, 2011, pp.180-181). அவ்வாறு அணுகும் போது சீன மந்திரவாதிகள் அவர்களின் நம்பிக்கை அல்லது சடங்குகளின் அடிப்படையில் இவர்களுக்கு வழங்கும் குறியீடுகள் அல்லது பொருள்கள் இவர்களின் வாழ்க்கையில் கடைபிடிக்கப்படுகிறது.

3. இந்து மற்றும் சீன வழிபாட்டில் உள்ள ஒற்றுமைகள்: இந்துக்களின் நம்பிக்கை சார்ந்த வியங்களுக்கும் சீனர்களின் நம்பிக்கை சார்ந்த விசயங்களுக்கும் நெறுங்கிய தொடர்பு இருக்கிறது. வாஸ்த்து சாத்திரம், சிரிக்கும் புத்தர் / குபேரன், தேவராஜன், குதிரை, விளக்கு, இப்படியாகப் பல விசயங்களில் மலேசிய இந்தியர்களுக்கும் சீன சமூகத்திற்கும் ஒற்றுமைகள் நிலவுவதால் மலேசிய இந்தியர்கள் சீனர்களின் நம்பிக்கையை வேற்று நம்பிக்கையாகப் பார்க்காமல் அதனைத் தங்களின் வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

## முடிவுரை

மலேசிய இந்தியர்களின் வாழ்க்கையில் பல்வேறு நிலைகளிலும் மலேசியச் சீன சமூகத்தின் நம்பிக்கை குறித்த தாக்கங்கள் நிலவுவதை இந்த ஆய்வு காட்டுகின்றது. மலேசிய இந்தியர்கள் பெரும்பான்மை இந்துக்களாக விளங்குகின்றனர். இவர்களின் வாழ்க்கையில் சீன சமூகத்தின் நம்பிக்கைத் தாக்கங்கள் இருந்த போது இவை முழுமையான ஆக்கிரமிப்பைச் செய்யவில்லை. மாறாக மலேசியத் தமிழர்கள் இன்னமும் தங்களின் பாரம்பரியமான பண்பாட்டு நம்பிக்கையில்தான் மிகுந்த பிடிப்புடன் இருக்கிறார்கள்.

பல இன மக்களுடன் சேர்ந்து வாழும் வாழ்க்கை முறையில் அவர்களின் பண்பாட்டு நம்பிக்கைத் தாக்கங்கள் மற்ற சமூகத்தின் மீது நிலவுவது இயற்கையான ஒன்றே ஆகும். அந்த அடிப்படையில் மலேசிய இந்தியர்களைக் காட்டிலும் எண்ணிக்கையில் பெரிய சமூகமாக விளங்கும் சீன இனத்தின் நம்பிக்கைத் தாக்கங்கள் மலேசிய இந்தியர்களிடையே அவர்களின் வாழ்க்கையில் ஒரு பகுதியக நிலைபெற்று விட்டது. இந்தத் தாக்கமானது நேர்மறைத் தாக்கமாக இருப்பதாகவே இருக்கிறதே தவிற, மலேசிய இந்தியர்களின் பாரம்பரிய, பண்பாட்டு நம்பிக்கைகளை அசைத்துப் பார்க்கும் தாக்கமாக இல்லை என்பது ஆய்வின் அறியப்பட்டுள்ளது.

## References

Aziz A., Dereman. (2005). *Asas Pemikiran Kebudayaan Malaysia*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Edmund Terence Gomez. (1999). *Chinese Business in Malaysia: Accumulation, Ascendance, Accommodation*. Richmond: Curzon Press.

Hock Tong Cheu. (1993). *Chinese Beliefs and Practices in Southeast Asia: Studies on the Chinese Religion in Malaysia, Singapore, and Indonesia*. Weatherhill.

Lan Clarke. (2003). *Malaysian Chinese Religion and Society: Ritual action and the Creation of Social Identity in Modern Urban Malaysia*. Thesis (Ph.D.), University of Otago.
Law Kian Aun. (2013). *The influence of Chinese traditional philosophy on Malaysian Chinese corporate leaders*. Thesis (Ph.D). Kuala Lumpur: Department of Thiong Hwa, Faculty of Arts and Social Sciences, Universiti Malaya.

Lee KamHing. (2000) *The Chinese in Malaysia*. Kuala lumpur: Oxford Univesity Press.

Lim Chooi Kwa dan Chia Oai. (2004). *Adat Resam Masyarakat Cina*. Kuala lumpur: Jabatan Perpaduan Negara dan Integrasi Nasional Jabatan Pedana Menteri.

Rajantheran, M. (1994). *Perayaan OrangIndia*. Kuala Lumpur: Penerbitan Fajar Bakti Sdn. Bhd.

Sharon A, Carstens. (2002). *Cultures, Identities: studies in Malaysian Chinese worlds*. Singapore: Times Academic Press.

Silllalee S., Kandasamy (2011). *Peranan Media Penyiaran Dalam Pembinaan Jati Diri India Malaysia: Kajian Kes Ke Atas Telefilem Di Astro Vaanavil*. Unpublished MA Disertation, University of Malaya.

Tan Chee Beng . (1985). *The Development and Distribution of Dejiao Associations in M laysia and Singapore: A Study on a Chinese Religious Organization*. Singapore: Institute of Southeast Asian.

Tan Chee Beng. (2004). *Chinese Overseas: Comparative Cultural Issues*. Hong Kong: Hong Kong University Press.

Tan Chee-Beng. (1983). Chinese Religion in Malaysia: a General view. (v.42, pp.217-252). Asian Folklore Studies.

Timothy P., Daniels. (2005). *Building Cultural Nationalism in Malaysia: Identity, Representation, and Citizenship*. New York: Routledge.